# வளரட்டும் கலையும் கலைஞரும்

**லக்ஷ்மி வெங்கட்ராமன்**

மாற்றம், வளர்ச்சி, புதுமை இவை எல்லாத் துறைகளிலும் தேவைப்படுகின்றன. கலை இதற்கு விதி விலக்கல்ல. நல்லவையும், அல்லாதவையும் இடம் பெறுகின்றன.

பல இளம் கலைஞர்கள் சமூக நிகழ்வுகளானாலும் சரி, அல்லது இயற்கையின் மாற்றங்களானாலும் சரி, தங்களை பாதித்தவைகளை நேர்த்தியாகத் தங்கள் படைப்புகளில் வெளிப்படுத்துகிறார்கள். வண்ணங்கள் பயன்படுத்தாமல்கூட பென்சில், கரி அல்லது இங்க் இவற்றால் கோடுகள், உருவகங்கள், ஒளி நிழல் இவற்றால் நம் கவனத்தைக் கவர முடியும், சிந்தனையைத் தூண்ட முடியும் என்று காட்டுகின்றனர். இத்தகைய கலைஞர்களை நாம் பாராட்டியே தீரவேண்டும்.

வித்தியாசமாகச் செய்கிறோம் என்பதற்காகவே எப்படி வேண்டுமானாலும், எதை வேண்டுமானாலும் செய்தால் அதைக் கலை என்று ஒப்புக் கொள்ள முடியுமா? சமீபத்தில் பெரிய அளவில் நடந்த ஒரு கலைக்கண்காட்சியைப் பார்க்க நேர்ந்தது. அதில் பல வெளிநாட்டவர்களின் படைப்புகள் இடம் பெற்றிருந்தன. ஒரு அறையின் நடுவில் கட்டிட இடிபாடுகளைக் கொட்டி வைத்து இன்ஸ்டலேஷன் *(Installation)* என்கிறார்கள்! நம் சென்னைத் தெருக்களில்தான் எத்தனை இன்ஸ்டலேஷன்கள்!

வீடியோ இன்ஸ்டலேஷன் இப்போது அதிகமாகப்பேசப்படுகிறது. அதே கண்காட்சியில் ஒரு வீடியோவில் ஒரு பெண்ணின் வாயைக் க்ளோசப்பில் படம் பிடித்திருக்கிறார்கள். அவள் வாயைப் பலவிதமாகக் கோணிக்கொண்டு “ஓ” “ஊ” என ஓசை எழுப்புகிறாள். இது ஒரு படைப்பா? மற்றொரு வீடியோவில் பல ஆண்களும், பெண்களும் ஒருவர்மேல் ஒருவர் புரண்டுக்கொண்டும் தடவிக் கொண்டும் இருக்கிறார்கள். இவற்றின் மூலம் என்னதான் கூற வருகிறார்கள்? இவையெல்லாமே வெளிநாட்டுக் கலைஞர்களின் படைப்புகள். அவரவர் நாட்டில் அந்தக் கலைஞர்களுக்கு என்ன மதிப்போ தெரியாது. ஆனால், நம் மக்களின் வெளிநாட்டு மோகம் போகும்வரை இவை போன்ற படைப்புகள்(?) வந்துகொண்டுதான் இருக்கும். இக்கண்காட்சியைப் பொறுப்பேற்று நடத்தியவர்கள் எப்படி அவற்றை தேர்ந்தெடுத்தார்கள் என்ற கேள்வி எழுகிறது.

**சமீபத்தில் பெரிய அளவில் நடந்த ஒரு கலைக்கண்காட்சியைப் பார்க்க நேர்ந்தது. அதில் பல வெளிநாட்டவர்களின் படைப்புகள் இடம் பெற்றிருந்தன. ஒரு அறையின் நடுவில் கட்டிட இடிபாடுகளைக் கொட்டி வைத்து இன்ஸ்டலேஷன்** *(Installation)* **என்கிறார்கள்! நம் சென்னைத் தெருக்களில்தான் எத்தனை இன்ஸ்டலேஷன்கள்!**

நிறங்கள், வடிவங்கள் மட்டுமேயான அப்ஸ்ட்ராக்ட் என்று சொல்லக்கூடிய மூத்த கலைஞர்களின் படைப்புகள் எத்தனையோ பார்த்திருக்கிறோம். அவைகளில் ஏதோ ஒன்று நம் மனதை ஈர்க்கும். மீண்டும் மீண்டும் பார்க்க வைக்கும். இப்போது என்னவென்றால் மனதில் தோன்றியதெல்லாம் வரைந்துவிட்டு “பிரமாதம்” என்று முழங்குகிறார்கள்.

மற்றொரு வருந்தத்தக்க விஷயம் ஏமாற்றுதல். நவீன தொழில்நுட்பத்தின் உதவியால் இது சாத்தியமாகிறது. காட்சிகளையோ, மனிதர்களையோ புகைப்படம் எடுத்து





அதைக் கான்வாஸில் பதிவு செய்து, அதன்மேல் அங்கங்கே அக்ரிலிக் அல்லது எண்ணெய் வண்ணங்களைத் தீட்டி, தானே அசலாகச் செய்தது போலக் கூறுகிறார்கள். விற்கவும் செய்கிறார்கள். விஷயம் தெரிந்தவர்களுக்கு இது புரியும். ஆனால் சாதாரண மக்கள் தங்களுடைய புது வீட்டிற்கோ அல்லது பரிசளிக்கவோ நினைக்கும்போது இத்தகைய ஓவியங்களைப் பார்த்து, "எத்தனை தத்ரூபமாக இருக்கிறது" என்று வியந்து, விலை கொடுத்து வாங்கிச் செல்கிறார்கள். மூத்த அல்லது காலம் சென்ற கலைஞர்களின் ஓவியங்களை காப்பி அடிக்கவும் உதவுகிறது இந்தத் தொழில்நுட்பம். *3-D* தொழில்நுட்பத்தால் சிற்பக்கலையிலும் ஏமாற்றுதல் நடக்கிறது.

இப்படியான குழப்பமான சூழலில் சில திறமையான உண்மையான கலைஞர்கள் காணாமல் போய்விடுகிறார்கள்.

கடந்த இருபது ஆண்டுகளுக்கும் மேலாக சில ஓவியர்களும், சிற்பிகளும் ஒரேமாதிரியான படைப்புகளையே வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு கால கட்டத்தில் அவர்களின் படைப்புகள் நல்ல வியாபாரமாகி, பெயரும் புகழும் வந்துவிட்டால் அதிலிருந்து மாறுவதற்கு துணிச்சல் இல்லையோ என்று தோன்றுகிறது. எங்கே தனது ஓவியங்கள்/ சிற்பங்கள் விற்பனையாகாதோ, தான் ஒதுக்கப்பட்டு விடுவோமோ என்றொரு பயம். ஆனால் கலை ஆர்வலர்கள் ஒரே மாதிரியான ஓவியங்களைப் பார்த்துக் கொண்டிருந்தால் அவர்களுக்கு அலுப்புத் தட்டிவிடாதா? கலைஞன் ஒரே இடத்தில் தேங்கிப்போகாமல் வளரவேண்டாமா?

அதேபோல் கலை ரசிகர்களும் பிரபலமான ஓவியர்கள்/சிற்பிகளின் படைப்புகள் உண்மையில் மோசமாக இருந்தாலும் அதை வெளிப்படையாகக் கூற பயப்படுகிறார்கள். அந்தக் கலைஞனுக்கே தோன்றியிருக்காத கருத்துகளை இருப்பதாகக் கற்பனை செய்து கூறிப் புகழுகிறார்கள். ஏன்?

அவர்களுக்கும் மற்றவர்கள் தன்னை ஒதுக்கிவிடுவார்களோ என்ற பயம்.

கலையும், கலைஞர்களும், ஆர்வலர்களும் வளரட்டும். வயதில் மட்டும் அல்ல, எண்ணங்களிலும், செய்யும் முறைகளிலும் ரசிகத்தன்மையிலும் வளரட்டும்.